2008 ஏப்ரல் 10]

திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். வருகின்ற நிதியாண்டிலாவது அதை அவர்கள் கட்டித் தருவார்களா என்று தங்கள்மூலம் கேட்க விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 82, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

82—

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

***24146—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி நகரத்தில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சீர்காழி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் வாடகைக் கட்டடத்தில் தற்போது இயங்கி வருகிறது. சீர்காழி நகரம் அல்லது நகரை ஒட்டிய மெயின் ரோட்டில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குச் சொந்தமாக இடம் வாங்க, தனியாருக்குச் சொந்தமான இடமோ அல்லது அரசுப் புறம்போக்கு நிலமோ தேர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2008-2009 ஆம் நிதி ஆண்டில் இப்பணி நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி நகரத்தில் இயங்கி வரும் வேளாண் விற்பனைக் கூடத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் இல்லை. அங்கே இடம் கிடைக்கவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

சொல்கிறார்கள். 2008-2009-லே விரைவிலே பணியை முடித்துக் கொடுப்பதாக உறுதியளித்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தங்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு, சீர்காழி நகரத்திலே இடம் கிடைப்பது அரிதாக இருக்கிறது. எல்லாமே ரியல் எஸ்டேட்களாக மாறிவிட்டன. இந்தத் தருணத்திலே விரைந்து அதைக் கையகப்படுத்தினால்தான், வேளாண் விற்பனைக் கூடத்திற்குப் புதிய கட்டடம் அமைக்க இயலும். எனவே, இந்த ஆண்டு விரைந்து முடிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழியிலே ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டப்பட வேண்டும் என்பதுதான் மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி. இதற்கான இடத்தை, அரசுப் புறம்போக்கு நிலத்தையோ அல்லது அரசாங்கம் கையகப்படுத்திய நிலத்தையோ தேர்வு செய்து, 2008-2009 ஆம் ஆண்டில் கட்டலாம் என்றுதான் சொல்லியிருக்கிறேன். இன்னொன்று, அரசு கையகப்படுத்துவது என்று சொன்னால், பல்வேறு விதிமுறைகளை, நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கும்; காலதாமதம் ஆகும். அதற்காகத்தான் இதுபோன்ற முக்கியமான பணிகளுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலே நிலச் சொந்தக்காரர்களை அழைத்து, இரண்டு தரப்பிலும் பேச்சுவார்த்தைமூலமே ஒரு விலையை நிர்ணயம் செய்து அரசுக்கு அனுப்பினால், அந்தத் தொகையை ஏற்று, அரசு செயல்படும்.

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

83—

மாணவர் விடுதி

***24091—திரு. கோ. எதிரொலி மணியன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—